செய்தி வெளியீடு எண்.63/2018 நாள் 23.10.2018




Photo Caption

சென்னை குடிநீர் வாரிய பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்ற மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர், தமிழ்நாடு பாடநூல் நிறுவன தலைவர் திருமதி. பா.வளர்மதி மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. S.R. விஜயகுமார், தி.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ப.சத்திய நாராயணன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.என்.விருகை ரவி, சென்னை

பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கூடுதல் தலைமை செயலர்/ மேலாண்மை இயக்குநர் திரு.அஷோக் டோங்ரே இஆப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர். த. பிரபுசங்கர் இஆப., சென்னை குடிநீர் வாரியத்தின் நிதி இயக்குநர் திரு.கே.முத்துக்குமாரசாமி,தலைமை பொறியாளர் திரு.ஆர்.சிவசண்முகம் உள்ளிட்ட பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னைக் குடிநீர் வாரிய பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் சார்பில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு எஸ்.பி. வேலுமணி அவர்கள் இன்று (23.10.2018) சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் துவக்கி வைத்தார்.**

பெருகி வரும் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வது கடினமான பணியாக மாறி வருகிறது.

சென்னை நகரத்தின் வேகமான தொழில் வளர்ச்சி மற்றும் மக்கள் தொகை பெருக்கம் காரணமாக தண்ணீர் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நிலத்தடி நீரை அளவிற்கு அதிகமாக பயன்படுத்தப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து கொண்டு வருகிறது.

மேலும், சென்னை நகரம் கடலோரப் பகுதியில் அமைந்துள்ளதால் அளவுக்கதிகமாக நிலத்தடி நீர் எடுப்பதன் மூலம், நகரின் சில பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்து நீரின் தரம் பாதிக்கப் படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு முன்னோடி திட்டமாக 2003ஆம் ஆண்டில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை ஒரு சிறப்பு

அரசாணையின் மூலமாக, தமிழகத்திலுள்ள அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை கட்டாமயமாக்கி வெற்றிகரமாக செயல்படுத்தினார்.

இத்திட்டத்தின்படி, சென்னை மாநகரில் உள்ள 9,00,000 வீடுகள் ( தனி வீடுகள், அடுக்கு மாடி குடியிருப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிக வளாகங்கள் உட்பட) மற்றும் 2,250 அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக, 2003ஆம் ஆண்டில் இருந்த சராசரி நிலத்தடி நீர்மட்ட அளவானது 6.80 மீட்டர் தற்பொழுது உயர்ந்து 4.30 மீட்டர் என்ற நிலையில் உள்ளது. சென்னையில் பல ஆண்டுகள் பருவமழை பொய்த்த போதிலும், இந்த உயர்வுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திய மழைநீர் சேகரிப்பு திட்டமே காரணமாகும்.

இதனை கருத்தில் கொண்டு, எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின் மூலம் ஏற்படும் அதிகபட்ச நன்மைகளான நிலத்தடி நீர்மட்டம் உயர்வு, நீரின் தன்மை மேம்பாடு, கடல் நீர் ஊடுருதலை தடுத்தல் மற்றும் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துதல் போன்ற பயன்கள் கருத்தில் கொண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் 2018 ஆம் ஆண்டிற்கான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிப்பதின் அவசியம் குறித்து கீழ்க்கண்ட விழிப்புணர்வு திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

1. சென்னையில் உள்ள அனைத்து அரசாங்க கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் உடனடியாக பணிகளை மேற்கொள்வது குறித்து அந்தந்த துறைத் தலைவர்களுக்கு தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வருகிறது.

2. சென்னை நகரில் தனி வீடுகள், அடுக்கு மாடி குடியிருப்புகள், வியாபார நிறுவனங்கள், கல்வி வளாகங்கள் மற்றும் சென்னை குடிநீர் வாரிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதா என்று சரி பார்த்து தேவையானஆலோசனைகளை வழங்கிட பராமரிப்பு பணிகள் பற்றிய சுவரொட்டிகள் வழங்கி வருகிறது.

3. சென்னை குடிநீர் வாரியத்திற்கு உட்பட்ட 200 பிரிவு அலுவலக எல்லைக்கு உட்பட்ட பள்ளிகளை தேர்வு செய்து அப்பள்ளியில் மாணவ மாணவிகளை கொண்டு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல் மற்றும் மாணவர்களை பராமரிப்பு பணிக்கான தூதுவர்களாக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

4. சென்னை குடிநீர் வாரிய அலுவலக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பின் பராமரிப்பு குறித்த பிரச்சார ஊர்திகள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

5. பள்ளி மாணவ மாணவியர்களை கொண்டு சென்னை குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பின் அவசியம் பற்றிய கட்டுரை / கவிதை / ரங்கோலி மற்றும் சுவர் ஓவியப் போட்டிகள் நடத்தப் பெற்று பரிசுகளையும் வழங்கி வருகிறது.

6. மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் பராமரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மழைநீர் சேகரிப்பு குறித்த செய்தியுடன், பிரபல நடிகை மற்றும் நடிகர்களை கொண்டு ஒரு குறும்படம் தயாரித்து அதனை தமிழக அரசின் கேபிள் டிவி மற்றும் திரையரங்குகளில் ஒளிபரப்பவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை, வடகிழக்குப் பருவமழை வருவதற்கு முன்பாக நன்கு பராமரித்து வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் வீடுகளிலுள்ள வடிகட்டும் தொட்டிகளில் நிரப்பியுள்ள மணல் / கூழாங்கல் / கருங்கல் ஆகியவற்றை வெளியே எடுத்து, அவற்றை நீரால் சுத்தம் செய்த பின்பு, மீண்டும் தொட்டியின் அடியில் கருங்கல், நடுவில் கூழாங்கல் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலே மணல் என்ற முறைப்படி நிரப்ப வேண்டும். மேலும் கட்டடங்களில் உள்ள மழைநீர்க் குழாய்களில் ஏதேனும் ஓட்டை / விரிசல் அல்லது அடைப்புகள் இருந்தால் அவற்றைச் சரி செய்து மழைநீர் வீணாகாமல் முழுவதும் பூமிக்குள் செல்வதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர், தமிழ்நாடு பாடநூல் நிறுவன தலைவர் திருமதி. பா.வளர்மதி மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. S.R. விஜயகுமார், தி.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ப.சத்திய நாராயணன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.என்.விருகை ரவி, சென்னை

பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கூடுதல் தலைமை செயலர்/ மேலாண்மை இயக்குநர் திரு.அஷோக் டோங்ரே இஆப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர். த. பிரபுசங்கர் இஆப., சென்னை குடிநீர் வாரியத்தின் நிதி இயக்குநர் திரு.கே.முத்துக்குமாரசாமி,தலைமை பொறியாளர் திரு.ஆர்.சிவசண்முகம் உள்ளிட்ட பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்